# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

C.C.No.5/2022

Deposition of witness for Prosecution – PW-4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவா | Caste | : | |
| S/o. | : | மணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 07.07.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் பெரியதண்டாவில் குடியிருக்கிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. 2016ம் வருடம் ஒரு நாள் என்னுடைய ஓட்டுனர் உரிமத்தை சரிபார்த்தல் சம்மந்தமாக கொளத்தூர் காவல்நிலையத்திற்கு வரும்படி என்னை அழைத்தார்கள். நான் அங்கு சென்றபோது என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் எழுதாத 2 தாள்களில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். போலிசார் வழக்கு

சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை</u> :

போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையின்போது 16.12.2016ம் தேதி காலை 10.00 மணிக்கு என் சொந்த வேலையாக காவல்நிலையம் வந்தபோது ஆஜர் எதிரியை எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தையின்றி ஆய்வாளர் விசாரித்தார் என்றும் அப்போது எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் தான் தனது மனையின் பெயரில் டிப்பர் லாரி வாங்கி அரசுக்கு சொந்தமான செட்டிப்பட்டி காவேரி ஆற்றுப்படுகையில் உள்ள மணலை அதிக லாபத்திற்கு விற்பதற்காக மணலை ஏற்றி வந்ததை ஒப்புக்கொண்டார் என்றும் அதன் நானும் அருணாசலம் மகன் வெங்கடேசனும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் 11.00 மணி அளவில் சம்பவம் நடந்த சம்பவ இடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற

வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd-S.Sumathy,
Principal Sessions Judge, Salem.